## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

SC.NO.217/2022

Deposition of witness for Prosecution – PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆனந்தகுமார் | Caste | : |
| S/o. | : தருமன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 05.08.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் தேவூர் செட்டிப்பட்டி வன்னியர் தெருவில் குடியிருக்கிறேன். நான் சம்பவத்தின்போது கெம்பிளாஸ்ட் கம்பெனியில் கெமிஸ்ட்டாக வேலை பார்த்து வருகிறேன். ஆனந்தன் என்னுடைய பெரியப்பா. அவர் செட்டிப்பட்டியில் உள்ள ஸ்ரீதுர்கை சுடலை காளியம்மன் கோவிலில் பூசாரியாக இருந்து வந்தார். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் பெயர் போர்மன்னன். அவர் எனக்கு தூரத்து சொந்தம் ஆவார்.

05.03.2022ம் தேதி இரவு 10.30 மணிக்கு ஆஜர் எதிரி என்

பெரியப்பாவை ஸ்ரீதுர்க்கை சுடலை காளியம்மன் கோவிலுக்கு முன் வைத்து வெட்டிவிட்டதாக என் அம்மா எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். போன் செய்தபோது இரவு 12.00 மணி இருக்கும். மறுநாள் காலை 7.00 மணிக்கு நான் வேலை முடித்து செட்டிப்பட்டிக்கு வந்து பின்னர் என் பெரியப்பாவை பார்ப்பதற்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன். என் பெரியப்பாவை பார்த்தபோது அவருக்கு கழுத்தில் வெட்டுப்பட்டு இருந்தார். மேலும் கை மற்றும் காதை ஒட்டி ரத்தக்காயங்கள் இருந்தது. முன்விரோதம் காரணமாக ஆஜர் எதிரி என் பெரியப்பாவை வெட்டியதாக கூறினார்கள். ஆஜர் எதிரிக்கும் என் பெரியப்பாவிற்கும் இருவரும் தொழில் செய்து வந்தார்கள், எதிரியின் மனைவி இறந்ததற்கு என் பெரியப்பாதான் காரணம் என்று ஆஜர் எதிரி சொல்லிக்கொண்டிருப்பார். அந்த முன்விரோதத்தினால் என் பெரியப்பாவை ஆஜர் எதிரி கொலை செய்துவிட்டார். போலிசார் என்னை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்எஸ்சி கெமிஸ்ட்ரி படித்திருக்கிறேன். சம்பவம் பற்றி என் அம்மா எனக்கு தகவல் சொன்னார் என்று போலிசார் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். மருத்துவமனையில் எத்தனை மணிக்கு எந்த போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் இரவு 8.00 மணிக்கு என்னை ஒரு பெண் ஆய்வாளர் விசாரித்தார். ஆய்வாளர் என்னை

விசாரித்துவிட்டு சென்றுவிட்டாரா அல்லது பிரேதத்தை ஒப்படைக்கும் வரை அங்கேயே இருந்தாரா என்றால் அதுபற்றி தெரியாது. என்னை விசாரித்தபிறகு நான் வேறு ஒரு இடத்தில் வந்து அமர்ந்திருந்தேன். தொழில் சம்மந்தமாக எதிரிக்கும் என் பெரியப்பாவிற்கும் முன்விரோதம் இருந்ததாக கூறி உள்ளேன். அது என்ன தொழில் என்றால் ஹய்ட்ராலிக் மெசின் வைத்து விறகு உடைக்கும் தொழில் ஆகும்.

ஹய்ட்ராலிக் மிசின் மற்றும் டிராக்டரை என் பெரியப்பாவின் மகன் சித்தநாதன் எதிரியிடமிருந்து வாங்கியிருக்கிறார் என்றால் தெரியும். அதற்கு சித்தநாதன் பணம் கொடுக்காததால் எதிரிக்கும் சித்தநாதனுக்கும்தான் விரோதம் என்றால் எனக்குத் தெரியாது. அவர்களுக்குள் பங்கு பிரிப்பதில் பிரச்சனை இருந்தது என்பது எனக்குத் தெரியும். என்னுடைய பெரியப்பா பில்லி சூனியம் வைப்பாரா என்றால் இல்லை, அவர் கோவில் பூசாரிதான். என் பெரியப்பா கோவிலில் பூசாரியாக இருப்பதால் எதிரியின் மனைவி இறந்ததற்கும் என் பெரியப்பா இறப்பிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் எதிரிதான் என் பெரியப்பா காரணம் என்று நினைக்கிறார். என் வீட்டிற்கும் என் பெரியப்பா வீட்டிற்கும் 200 அடி தூரம் இருக்கும் என்றால் சரி. என் வீடு மெத்தை வீடு, பெரியப்பா வீடு அடுக்குமாடி வீடு என்றால் என் வீடு ஓட்டு வீடுதான். எதிரியின் வீட்டிற்கும் என் பெரியப்பா வீட்டிற்கும் ஒன்னரை கிலோமீட்டர் இருக்கும் என்றால் சரி.

செட்டிப்பட்டி மெயின் ரோட்டை ஒட்டி மாரியம்மன் கோவில் உள்ளது, அடுத்து அரசுபள்ளி, அதை அடுத்து சரபங்கி ஆற்று ஓரம் துர்க்கை அம்மன் கோவில் உள்ளது என்றால் சரி. மேற்படி கோவிலில்

எனக்கு பங்கு பாத்தியம் உள்ளதா என்றால் இல்லை. கோயில் கணக்கு வழக்குகளை யார் எப்போது பார்ப்பார்கள் என்றால் எனக்குத் தெரியாது. நான், என் பெரியப்பாவிற்காகவும் என் அண்ணன் சித்தநாதனுக்காகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் என் பெரியப்பாவிற்கும் முன்விரோதம் கிடையாது என்றம் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.